# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

**மனைப்பொருளியல் I**
**Home Economic I**

**Two Hours**

**Gr -13 (2021)**

**28 | T | I**

### பகுதி I

1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1)(2)(3)(4)(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. இரண்டு முதன்மை வர்ணங்களின் சேர்க்கையினால் தோன்றும் வர்ணம்
   1. சிவப்புச் செம்மஞ்சள்
   2. செம்மஞ்சள்
   3. புடை சிவப்பு
   4. மஞ்சள் பச்சை
   5. செவ்வூதா

2. மென்நிலத்தோற்ற வடிவமைப்புத் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   1. இயற்கைச் சூழலை மாற்றியமைப்பதுடன் தாவரங்களை வெவ்வேறு வடிவங்களில் கத்தரித்தல்
   2. நிலத்தோற்றத்திற்கமைய பயணிக்கக்கூடிய வெளியை அமைத்தல்.
   3. பாலம்,சிற்பங்கள்,பூங்கா விளக்குகள் போன்ற கூறுகளைப் பொருத்தமானதாகப் பயன்படுத்தல்.
   4. இயற்கைச் சூழலை நுணுக்கமாக மாற்றியமைத்தல்.
   5. காணியின் அளவுக்கேற்ப நிலப்பரப்பிலும். வெளியிலும் தாங்கிக்கொள்ளத்தக்கவாறாக தாவரங்கள், கூறுகளை தாபித்தல்.

3. பின்வருவனவற்றில் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
   1. சூழற் கூறுகளின் அளவுகளுடனும் ஏனைய கட்டடங்களின் அளவுகளுடனும் பொருந்தியமைதல் அமைப்பும் அமைவும் ஆகும்.
   2. கட்டடங்களின் அக மற்றும் புற வெளிகளை அமைக்கும் போது பெறுமானம் அழிவுறாதவாறு அமைத்தல் பெறுமானத்தொகுதி ஆகும்.
   3. உள்ளகவெளி நிருமாணிப்பு என்பது பௌதீக வாழ்க்கைச் சூழலின் பகுதியாகும்.
   4. பௌதீக, சமூக, உள நெருக்கிடைகளை இழிவாக்குதல் வாழ்க்கைச்சூழல் நிர்மாணிப்பின் முக்கிய அம்சமாகும்.
   5. ஏற்கெனவே உள்ள பௌதீக. சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளுடன் பொருந்தியமைதல் பொருத்தப்பாடு எனப்படும்.

4. பின்வருவனவற்றுள் உட்புறவெளி நிருமாணிப்பு பற்றிய சரியான கூற்றாக அமைவது.
   1. செங்கற்சுவர்கள் தடிப்பானவையாகையால் வடக்கு-தெற்கு திசைகளில் அமைக்கப்படும் சுவர்களுக்கு மிகப்பொருத்தமானதாகும்.
   2. வெண்மை நிறமான தரை வெளியை சிறியது போன்று காட்டும்.
   3. இடவசதி, பாங்கு, வடிவம் என்பவற்றிற்கேற்ப தளவாடங்கள் தெரிவு செய்யப்படவேண்டும்.
   4. கூரை, பாவு ஆகியவற்றிற்கு வெப்பக்காவலிப்பதார்த்தங்களை பயன்படுத்துவது பொருத்தமற்றதாகும்.
   5. ஒளியின் செறிவு கேட்ஸ் என்னும் அலகில் அளவிடப்படும்.

5. கருப்பஞ்சாறு, பால் ஆகியவற்றில் அடங்கியுள்ள டைசக்கரைட்டுக்கள் முறையே.
1. குளுக்கோசு, மோல்ரோசு
2. புரற்றோசு, சுக்குரோசு
3. கலற்றோசு, மோல்ரோசு
4. இலற்றோசு, கலற்றோசு
5. சுக்குரோசு, இலற்றோசு

6. பின்வருவனவற்றில் பாசிப்பயற்றில் அடங்கியுள்ள அமினோஅமிலம் இனங்காணப்படுவது.
1. லைசீன்
2. மெதியோனின்
3. அலனின்
4. இத்திடின்
5. வலீன்

7. பின்வரும் கூற்றுக்களுள் நிரம்பிய கொழுப்பமிலம் பற்றிய சரியான கூற்றைத் தெரிக.
1. கொழுப்பமிலத்தின் ஐதரோக்காபன் சங்கியில் ஒற்றைப்பிணைப்பிற்கு மேலதிகமாக இரட்டைப்பிணைப்புக்களும் காணப்படும்.
2. கொழுப்பமில அணுக்களால் வேறு பிணைப்புக்களை உருவாக்க முடியாது.
3. ஒன்றுக்கு மேற்பட்ட பிணைப்புக்கள் காணப்படும் போது பல்நிரம்பாக் கொழுப்பமிலம் என அழைக்கப்படும்.
4. தேங்காய் எண்ணெயில் அடங்கியுள்ள பாமிற்றிக்கமிலம் பல்நிரம்பாக்கொழுப்பமிலமாகும்.
5. கொழுப்பமிலங்களில் பிரதானமாக நிரம்பாக்கொழுப்பமிலங்கள் காணப்படும்.

8. மேலதிகமாக உள்ளெடுக்கும் போது நீரில் கரைந்து உடலிலிருந்து வெளியேறும் விற்றமின்கள் எவை?
1. A,D
2. B,E
3. C,D
4. B,C
5. E,K

9. குடல்வாழ் பற்றீரியாக்கள் விற்றமின் B கூட்டினை உற்பத்தி செய்வதற்கு உதவுகின்ற போசணைப் பதார்த்தம் எது?
1. புரதம்
2. கொழுப்பு
3. கனிப்பொருட்கள்
4. நார்ப்பொருட்கள்
5. காபோவைதரேற்

10. பழவகைகளில் அடங்கியுள்ள எவ்விற்றமினானது முளைய வளர்ச்சி, நரம்புக்கலங்களின் தொழிற்பாடு போன்றவற்றின் மேம்பாட்டிற்கு அவசியமானதாகும்.
1. போலிக்கமிலம்
2. அடினோசின்
3. நயசின்
4. கல்சிபெரோல்
5. இரைபோபிளேவின்

11. புரதச்சமிபாட்டுக்கு அவசியமான சதையச்சாறு எது?
1. அமைலேசு
2. திரிச்சின்
3. இலைப்பேசு
4. பித்தம்
5. பெப்சின்

12. கல்சியம், மக்னீசியம், இரும்பு போன்ற கனியுப்புக்களின் அகத்துறிஞ்சல் குறைவடைவதற்கான காரணம் எனக்கருதப்படும் செயற்பாடானது.
1. மதுபானம் அருந்துதல்
2. கஃபேன் அடங்கியுள்ள பானவகைகள் அருந்துதல்
3. தவிட்டரிசியில் அடங்கியுள்ள ஃைற்றிக்கமிலம் காரணமாக
4. மனிதனின் உளநெருக்கிடை நிலைமை
5. மேற்கூறிய யாவும் சரி

13. நீண்டகாலக் குறையூட்டம் ஏற்படுவதற்குக் காரணமான சந்தர்ப்பமாக அமையாதது.
1. பிள்ளைப்பருவத்தில் சரியான போசணை கிடைக்காமை.
2. தரமான உணவு கிடைக்காமை
3. அடிக்கடி தொற்றுநோய்க்கு ஆளாதல்
4. குறுகிய காலத்துள் உணவு நுகர்வு குறைவடைதல்
5. கர்ப்பிணிக்காலத்தில் தாய் போசணைக் குறைபாட்டுக்கு உள்ளாதல்.

14. சரியான உணவுப்பழக்கங்கள் பற்றிய கூற்றுக்களுள் மிகப்பொருத்தமான கூற்றாக அமைவது.
1. தினமும் உடற்பயிற்சி செய்தல்.
2. மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்.
3. காலைவேளை உணவைக் கட்டாயமாக உட்கொள்ளல்.
4. வீட்டில் தயாரித்த உணவையே உட்கொள்ளல்.
5. நார்ப்பொருட்கள் அடங்கிய உணவுகளைத் தினமும் உணவுடன் சேர்த்துக் கொள்ளல்

15. ஆரோக்கியமான ஒருவரின் உடற்திணிவுச் சுட்டியானது பின்வரும் எவ்வளவுகளைக் குறித்து நிற்கும்.
1. 18.5 - 25.0 வரை
2. 18.5 இலும் குறைவு
3. 25.0 - 30.0 வரை
4. 30 இலும் உயர்வு
5. 27.0 - 30.0 வரை

16.
- ❖ வாய் கோணியிருத்தல்
- ❖ திக்குதல்
- ❖ உடலின் ஒரு பகுதி செயலிழத்தல்
- ❖ தலைச்சுற்று

மேற்குறித்த அறிகுறிகள் எந்நோய் நிலைமைக்குரியதாகும்?
1. மலச்சிக்கல்
2. கொழுத்த உடல்
3. நீரிழிவு
4.. இதயநோய்
5. சோர்வாதம்

17. A) எரிகாயமிருப்பின் அந்த இடத்தை மூடுதல்
B) அதிர்ச்சியைத் தடுத்தல்
C) வைத்திய உதவியை நாடுதல்
மேற்குறித்த முதலுதவி முறையானது எவ்விபத்துக்குரியதாகும்?
1. வெட்டுக்காயம்
2. மின்தாக்கு
3. ஆடையில் தீப்பற்றுதல்
4. வழுக்கி விழுதல்
5. எரிகாயம்

18. உணவு தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் மொனோசோடியம் குளுட்டமேற்று எந்த சேர்மான பொருள் தொகுதிக்குரியதாகும்?
1.. இயற்கைச் சுவையூட்டி
2. செயற்கைச் சுவையூட்டி
3. பொங்கும் பொருள்கள்
4. இயற்கை நிறமூட்டி
5. பதப்படுத்திகள்

19. ஸ்ரு செய்தல் சமையல் முறையின் போது சமைக்ககூடிய உணவுக்கூட்டம் எது?
1. சோறு, கிழங்கு, முட்டை
2. பாண், கேக், பிட்சா
3. இறைச்சிவகை, மீன், பழங்கள்
4. மீன், முட்டை, மரக்கறி
5. ரொட்டி, தோசை, பாபிகியூ

20. எக்லாயாசு, புரொப்பிற்ற ரோல்ஸ் போன்ற சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாப்பசை வகை எது?
1. பாண் மாப்பசை
2. பப்பேஸ்ரி மாப்பசை
3. சோட் கிரஸ்ட் மாப்பசை
4. சூ மாப்பசை
5. நொருங்கு மாப்பசை

21. பின்வரும் செயற்பாடுகளுள் தைத்த ஆடைகளின் நேர்த்தியாக்கல் செயன்முறையாகக் கருதப்படுவது.
1. தேவையற்ற நூற்பகுதிகளை வெட்டி நீக்குதல்
2. தையல் முறைகளின் பயன்பாடு
3. திறப்புக்களை மூடும் முறை
4. உட்புற நேர்த்தி
5. விளிம்புகளை நேர்த்தி செய்ய ஓவர்லொக் தையல் முறை பயன்படுத்தப்படல்

22. கைத்தையல் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. இத்தையல் ஊசியின் நூல், துடிக்கட்டையின் நூல் மற்றும் மூடியநூல் என்பவற்றால் ஆனது
B. இரண்டு துணிப்பகுதிகளை ஒன்றாக இணைக்கப் பயன்படும்
C. இதற்கு வளைவான ஊசி பயன்படுத்தப்படும்
D. ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட ஊசிகள் பயன்படுத்தப்படும்

இவற்றுள் சரியான கூற்றுக்கள்
1. B. D
2. A, B
3. B, C
4. C, D
5. A, D

23.





மேற்குறித்த தையல்களை இனங்காண்க.
1. நரம்புத்தையல், சற்றின் தையல்
2. சங்கிலித்தையல், லேசிடேசித் தையல்
3. பிரசீலியன் தையல், சற்றின் தையல்
4. பிரான்சிய முடிச்சு, கம்பளித்தையல்
5. சங்கிலித்தையல், பிரசீலியன் தையல்

24. எரிக்கும்போது சுவாலை மஞ்சள் நிறமானதுடன் சுயமாக அணையும் இயல்புடையதுமான துணிவகை எது?
1. பட்டு
2. அக்கிரிலிக்கு
3. நைலோன்
4. லினன்
5. கனியக் கன்னார்

25. 

இவ்வுருவில் ஒருவகை நார்களின் நெடுக்குவெட்டுக் கட்டமைப்புக் காட்டப்பட்டுள்ளது. இந்நார்
1. பருத்திநாரின் நெடுக்கு வெட்டு
2. மினுக்கிய பருத்திநாரின் நெடுக்கு வெட்டு
3. பட்டு நாரின் நெடுக்கு வெட்டு
4. கம்பளி நாரின் நெடுக்கு வெட்டு
5. நைலோன் நாரின் நெடுக்கு வெட்டு

26. பத்திக்முறையில் சாயமூட்டுவதற்கு சரியான துணியாகக் கருதப்படுவது.
1. பருத்தி, லினன்
2. பட்டு, நைலோன்
3. பொலியஸ்ரர், பருத்தி
4. லினன், கம்பளி
5. கம்பளி, பருத்தி

27. மழை மேலங்கித்துணி, குடைத்துணி போன்றவற்றிற்கான நேர்த்தியாக்கல் முறை எது?
1. தீயெதிர்ப்பு நேர்த்தி
2. பற்றீரியா எதிர்ப்பு நேர்த்தி
3. பேமங்கனேற்று சிவிறல் நேர்த்தி
4. குண்டு துளைக்காத நேர்த்தி
5. நீர்புகா நேர்த்தியாக்கல்

28. பின்வரும் கூற்றுக்களுள் அச்சுப்பதித்தல் முறை தொடர்பான சரியான கூற்றாக அமைவது.
1. இவ்வகை அச்சிடலில் முழுத்துணியும் சாயக்கரைசலினுள் அமிழ்த்தப்படும்
2. அச்சுக்களைத் தயாரிப்பதற்கு X கதிர்தாள் பயன்படுத்தப்படும்
3. அச்சின் மீது சாயத்தைப்பூசி அச்சை துணியின் மீது வைத்து அழுத்துவதனால் பெறப்படுகின்றது.
4. இம்முறைக்காக விடே சட்டகம் தயாரிக்கப்பட வேண்டும்.
5. காட்டுருவின் வெவ்வேறு இடங்களில் திரவமெழுகைப் பூசுதல் வேண்டும்.

29. பின்வருவனவற்றுள் எழுத்துமூலமான தொடர்பாடலின் சரியான கூற்றாக அமைவது
1. விரைவாகத் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்.
2. மீட்டிப்பார்த்தல் கடினமாகும்.
3. செய்தி பெறுபவரின் நடத்தைகளை அவதானிக்கலாம்.
4. மீள் பாவனைக்கான சான்றாக அமையும்.
5. நேருக்கு நேராக கருத்துப் பரிமாற்றம் நடைபெறும்.

30. நேர்முகப் பரீட்சையொன்றிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்களில் தேவையற்றது என நீர் கருதுவது.
1. பிறப்புச் சான்றிதழ்
2. சுயவிவரப் பட்டியல்
3. கல்வித்தகைமைச் சான்றிதழ்
4. குடும்ப அட்டை
5. வைத்தியச் சான்றிதழ்

31. பின்வருவனவற்றுள் சரியான தொடர்பாடல் எனும் பதம் குறித்து நிற்பது.
1. தொடர்பாடலின் போது பயன்படுத்தும் அங்கஅசைவுகள் பிறருக்குப் பாதிப்பை ஏற்படுத்தாததாக இருக்க வேண்டும்.
2. தொடர்பாடலிற்கு மொழியறிவு, ஆளுமை என்பன தேவையற்ற விடயங்களாகும்.
3. பிறருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையில்லை.
4. நிறுவனத்தலைவர் கூறும் கருத்துக்களைப் பணியாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
5. தொடர்பாடலின் போது விமர்சனங்களை முன்வைத்தல் அனுகூலமானதாக அமையும்

32. ஆளிடைத் தொடர்புகளை விருத்தி செய்வதற்கு உகந்த பண்பு
1. போட்டியியல்பும், கவர்ச்சியும்
2. கவர்ச்சியும், தோற்றமும்
3. தோற்றமும், தலைமைத்துவமும்
4. தலைமைத்துவமும், கவர்ச்சியும்
5. போட்டியியல்பும், தலைத்துவமும்

33. A) படித்தல்
B) கரம் விளையாடுதல்
C) வானொலி கேட்டல்
D) இசை நிகழ்ச்சி கேட்டல்
E) சிரமதானச் செயற்பாட்டில் ஈடுபடல்
மேற்குறித்த ஓய்வுநேரச் செயற்பாடுகளில் செயலூக்கமுள்ள ஓய்வுநேரச் செயற்பாட்டைக் குறித்து நிற்பது:
1.A,B,C
2.B,C,D
3.C,D,E
4.C,D,A
5.A,B,E

34. இன்பப்பொழுதுபோக்குச் செயற்பாடுகளின் வெற்றிக்குக் காரணமாக அமையாத தொழினுட்ப முறை:
1. பொருளாதாரம்
2. போக்குவரத்தும் அணுகும் ஆற்றலும்
3. சௌகரியம்
4.. தகவல் பரப்புதல்
5. பாதுகாப்பு

35. சுற்றுப்பயணத்துறையின் சுற்றாடல்சார் தாக்கங்களில் நேர்வகையானது:
1. சூழல் மாசடைதல்
2. சூழல் தொகுதிகள் அழிவுறுதல்
3. சூழல் தொடர்பான அறிவு வளர்ச்சியடைதல்
4. பிரதேச பொருளாதாரத்தின் மீது பங்களிப்புச் செய்தல்
5. தொழில் வாய்ப்புக் கிடைத்தல்

36. A) கிண்ணியா வெந்நீர் ஊற்றுக்கள்
B) தலதா மாளிகை
C) தெகிவளை மிருகக்காட்சிச்சாலை
D) சிங்கராஜ வனம்
E) யால சரணாலயம்
மேற்குறித்த சுற்றுலாக் கவர்ச்சி வகைகளில் மனிதனால் கட்டுப்படுத்தப்படும் கவர்ச்சியாகக் கருதப்படுவது.
1. A, B
2. D, E
3. B, C
4. C, D
5. A, E

37. நீர்க்காப்பில் மலசலகூடத்தேவைகள், கழுவுதல் என்பன எத்தேவைக்குரியதாகும்.
1. அடிப்படைத்தேவை
2. துணைத்தேவைகள்
3. மூன்றாம் நிலைத்தேவை
4. நான்காம் நிலைத்தேவை
5. கைத்தொழில் தேவை

38. மின் வழங்கலில் ஓட்டம் என்பதன் சரியான கூற்று
1. மின் வழங்கலொன்றிலிருந்து சுமை வரையில் பாயும் இலத்திரன்கள்
2. மின் உபகரணமொன்று ஒரு செக்கனில் செய்யும் வேலையின் அளவு
3. கடத்தியொன்றின் ஊடாக மின்னோட்டம் பாய்வதற்கு எதிரான தடங்கல்
4. கடத்தி ஒன்றின் இரண்டு அந்தங்களுடன் மின்வழங்கலைத் தொடுப்பதால் அக்கடத்தியினூடாக மின்னோட்டம் பாய்தல்
5. ஓர் அந்தத்திற்குச் சார்பாக மின்னையும் மற்றைய அந்தத்தில் அழுத்த வித்தியாசமும் காணப்படும்.

39. பின்வரும் மின்குமிழ் வகைகளில் குறைந்த வலுவுடையதும் நீண்ட ஆயட்காலமுடையதுமாக நீா் கருதுவது.
1. CFL மின்குமிழ்
2. LED மின்குமிழ்
3. புளோரொளிர்வு மின்குமிழ்
4. இழை மின்குமிழ்
5. வெள்ளொளிர்வு மின்குமிழ்

40. பின்வரும் மின்சாதனங்களில் மின்சக்தி வெப்பசக்தியாக மாற்றப்படும் உபகரணமானது.
1. அமிழ்ப்பு வெப்பமாக்கி
2. மின்மோட்டர்
3. மின் விசிறி
4. வானொலி
5. மின் விளக்கு

41. பின்வருவனவற்றில் மீள உருவாகத வளமாகக் கருதப்படுவது.
1. பயிர்களும், விலங்குகளும்
2. உயிர்த்திணிவுகள்
3. அரிமரம்
4. சூரிய சக்தி
5. இயற்கை எரிவாயு

42. பின்வரும் காரணிகளுள் பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக அமைவது
1. கால்நடை வளர்ப்பு
2. நெற்செய்கை
3. மிகைவள நுகர்வினைக் குறைத்தல்
4. காடழித்தல்
5. நகர்ப்புறக் கழிவுகள்

43. மீள் சுழற்சிப்படுத்தல் பற்றிய சரியான கூற்று
1. கழிவுப்பொருளைப் பயன்தரக்கூடிய மற்றுமொரு பொருளாக மாற்றும் செயன்முறை
2. ஒரு பொருளைக் கழித்தொதுக்கும் முன்னர் இயன்றளவிற்கு பயன்படுத்தல்
3. பொதியுறையை நிராகரித்தல்
4. கடித உறைகளை மீளப்பயன்படுத்தல்
5. பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்தல்

44. பின்வரும் நடவடிக்கைகளில் பொருத்தமான கழிவு முகாமையாக நீா் கருதுவது.
1. திறந்த நிலையில் எரித்தல்
2. கழிவுகளைக் கடலில் கொட்டுதல்
3. கூட்டெரு உற்பத்தி
4. வெளியான இடங்களில் கழிவுகளைக் கொட்டுதல்
5. தொழிற்சாலைக் கழிவுகளைக் குளம், கடலில் சேர்த்தல்

45. நபா் ஒருவரில் ஆளுமை விருத்தி ஏற்படுவதற்கு ஏதுவான வளர்ச்சியானது.
1. உடலியல் வளர்ச்சி
2. உளவியல் வளர்ச்சி
3. ஒழுகலாறு வளர்ச்சி
4. மனவெழுச்சி வளர்ச்சி
5. மேற்கூறிய யாவும் சரி

46. A – அதிக கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
B – தாழ்வுச்சிக்கல்
C – எப்போதும் சோகமான உணர்வுடன் காணப்படல்
D – ஞாபகம் தொடர்பான பிரச்சினை
E – பெற்றோரின் அதீத கட்டுப்பாடு

மேற்குறித்தவற்றில் கட்டிளமைப்பருவத்தோர் எதிர்நோக்கும் பிரச்சினையானது
1. B,C
2. A,D
3. B, D
4. D, E
5. A, E

47. உளச் சமநிலை ஆளுமையுடைய ஒருவரின் பண்பாகக் காணப்படுவது.
1. முன்வரும் திறனைக் கொண்டிருத்தல்
2. நபரின் உயரமும் உயரத்திற்கேற்ற பருமனும்
3. கற்ற விடயங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கும்
4. தசைகளின் சீரான அமைப்பு
5. விரைவில் சினக்காத தன்மை

48. உடல், உள்ளம் ஆகியவற்றை தளர்வடையச் செய்யும் பயிற்சியாக நீர் கருதும் செயற்பாடு
1. மூச்சுப்பயிற்சி
2. வரைதல்
3. உடற்பயிற்சியில் ஈடுபடல்
4. பாடல் கேட்டல்
5. நண்பர்களுடன் உரையாடல்

49. நிதி விளைதிறன் பற்றிய சரியான கூற்று.
1. உழைப்பின் மூலம் கிடைக்கும் வெளியீடு
2. அலகுக் கிரயத்துக்காக கிடைக்கும் வெளியீடு
3. உள்ளீட்டிற்காகக் கிடைக்கும் வெளியீடு
4. நிலத்திலிருந்து கிடைக்கும் வெளியீடு
5. எண்ணக்கருமூலம் கிடைக்கும் வெளியீடு

50. வணிகம் ஒன்றினை ஆரம்பிக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய அம்சம்:
1. வணிகத்திற்கான இடம்
2. பகுப்பாய்வு
3. வணிகத்திட்டம்
4. வணிக வாய்ப்புகள்
5. போட்டியாளர்